23rd March 1961]

Sri V. K. KOTHANDARAMAN : கிளர்ச்சிக்குப் பிறகு தமிழ் நாடு என்று பெயர் வைக்க ஏற்றுக்கொண்ட காரணத்தினால், பொதுவாக எந்தப்பிரச்னையாகயிருந்தபோதிலும் கிளர்ச்சி செய்வது மூலமாகத்தான் காரியத்தைச் சாதிக்க முடியும் என்ற மனோபாவம் பொதுமக்களிடையே வளர்ந்திருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பொதுமக்கள் மத்தியில் அவ்வித மனோபாவம் ஒன்றும் வளர வில்லை. ஆனால் கனம் அங்கத்தினர் அவர்கள்தான் அப்படி ஒரு பிரசாரம் செய்யப் பார்க்கிறார்கள் என்று புலப்படுகிறது. அவர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன், என்ன மாறுதலை அரசாங்கம் ஒப்புக்கொண்டு முடிவுசெய்து நிறைவேற்ற வருகிறதோ அந்த மாறுதல் இந்தக் கிளர்ச்சி ஏற்படுவதற்கு முன்பே முடிவு செய்யப்பட்ட விஷயம். இந்தக் கிளர்ச்சியின் தலைவரிடமே இது தெரிவிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தாங்கள் தான் சாதித்துவிட்டோம் என்று சொல்வதானால் யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளலாம்.

Sri J. MATHA GOWDER : நீலகிரியில் அரெஸ்ட் செய்யப்பட்டவர்கள் எல்லோரும் விடுதலை அடைந்து விட்டார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : முதலில் பெயிலில் விடப்பட்டிருந்தது. பின்னால் என்ன நடந்தது என்று தெரியவில்லை.

Sri J. MATHA GOWDER : அவர்கள் பேரில் இன்னும் ஏதாவது நடவடிக்கைகள் இருக்குமானால் கிளர்ச்சிகள் முடிந்து விட்டதே; ஆகவே அவர்களை விடுதலை செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள்மீது அனுதாபம் காட்டுவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. அங்கு, சிவில் கோர்ட் நடக்கிறது, கோர்ட் காம்பவுண்டுக்குள் உட்கார்ந்து கொண்டார்கள். கோர்ட் நடக்கிறது என்று கூறியும் கேட்காமல் சப்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்படி கோர்ட் நடவடிக்கைகள் பாதிக்கப்படக் கூடியவாறு நடந்துகொண்டார்கள். விடுதலை செய்வது பற்றி, பிரத்தியேக சலுகை காட்டவேண்டுமென்பதற்கு இடமில்லை.

Residential peons of officers (discharged)

*1029 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN :
Sri M. P. SARATHI: } கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சம்பளக் கமிஷன் சிபார்சின்பேரில் ஆபீசர்களின் வீடுகளில் வேலை செய்யும் பியூன்களை வேலையிலிருந்து எடுத்துவிடப் போவது உண்மையா ?

(இ) எப்போது முதல் ?

(உ) எந்த அளவுக்கு எடுத்துவிடுவதாக உத்தேசம் ?

(எ) எடுக்கப்படும் பியூன்களுக்கு வேறு வேலை கொடுப்பதாக உத்தேசமுண்டா ? விவரம் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (அ) Based on the recommendation of the Madras Pay Commission, for a reduction in the present strength of peons in Government Service, the Government have formulated a scheme for a gradual retrenchment of peons sanctioned for work in the residence of certain officers. The Government have sanctioned Rs. 30 per mensem to officers who would prefer to surrender their residence peons. Every officer, who is entitled to a peon in his residence, was given the option, to retain the peon or surrender him and receive Rs. 30 per mensem as compensatory allowance *in lieu* of the peon. The

allowance given is to enable the officer to make his own arrangement to ensure that the official work done by the residence peon continues to be discharged.

(இ) The scheme came into operation from the 15th December 1960.

(உ) It has been ordered that no peon who had put in more than one year total aggregate service on 15th November 1960 should be discharged against surrender of residence peons by officers.

(ள) The question of giving preference to retrenched peons, who are qualified for appointment, in fresh vacancies in future will be considered.

SRI V. K. KOTHANDARAMAN: இந்த 30 ரூபாய் சம்பளத்தில் இன்றைய விலைவாசி அடிப்படையில் அவர்களுக்கு ப்யூன்கள் கிடைப்பார்கள் என்று சர்க்கார் கருதுகிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: முழு நேர ப்யூன்ஸ் கிடைப்பார்கள் என்றால் வைத்துக்கொள்ளலாம். அல்லது, ரெஸிடென்ஷியல் ப்யூன்ஸ் வேலைக்கு முழு நேர ப்யூன்ஸ் அவசியமில்லை. அந்தச் சம்பளத்திற்கு, சிறிது நேரம் வேலை பார்க்கும் முறையில் வேண்டுமானால் ஏற்பாடு செய்யலாம் என்பதை ஒப்புக்கொண்டு அப்படிச் செய்ய முடியும் என்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

SRI T. S. RAMASWAMY: May I know how many such peons have been surrendered so far?

THE HON. SRI C. SUBRAMANIAM: At the time the answer to this question was formulated, 162 officers have exercised their option to surrender their respective peons.

Mofussal bus-stand in the City

* 1030 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Electricity be pleased to state with reference to answers given to Questions Nos. 134 and 135 on 4th September 1959 the decision taken in regard to the shifting of the mofussal bus-stand in the Madras City from its present location?

THE HON. SRI V. RAMAIAH: The proposal to shift the mofussal bus-stand was examined but was not accepted by Government.

SRI A. A. RASHEED: May I know whether the Hon. Minister is aware of the fact that the sanitary conditions in the existing bus-stand are a disgrace to the City?

THE HON. SRI V. RAMAIAH: Government have knowledge of the existing conditions and they have set up a small Committee to go into it and the Committee has submitted its report and it is being looked into.

SRI K. ANBAZHAGAN: இப்பொழுதுள்ள வெளியூர் பஸ் நிலையமானது, பொது மக்கள் தங்குவதற்கு இடவசதியற்றதாகவும், பஸ்கள் வந்து நிற்க போதுமான இடமற்றதாகவும் இன்னும் பல வகைகளில் பொதுமக்களுக்கு தொல்லை தருவதுமாகவும் இருப்பதால் அதை உடனடியாக மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

THE HON. SRI V. RAMAIAH: இப்பொழுது பஸ் ஸ்டாண்ட்